| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு. ப.வேல்முருகன், பி.இ.,<br>உறுப்பினர் செயலர் (பொ),<br>மதுரை உள்ளூர் திட்டக்குழுமம்,<br>மாநகராட்சி அலுவலக வளாகம்,<br>3-ம் தளம், அண்ணாமாளிகை,<br>மதுரை - 2.<br>E.mail –ID : mlpa_ctcp@yahoo.in<br>www.tn.gov.in/dtcp | திரு. C.பிரபாகரன்,<br>க.எண்.16/22G, அம்பேத்கார் நகர்,<br>மதுரை - 625 004. |
| ந.க. எண்.5402/2018/மதி.2 | நாள் : 31 .01.2019 |

ஐயா,

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப் படுத்துதல் திட்டம், 2017 - மதுரை உள்ளூர் திட்டக் குழுமப் பகுதி / மதுரை மாவட்டம், தெற்கு தாலுகா, வேடர்புளியங்குளம் கிராமம், சர்வே எண்.145/3, 4, 146/1A, 1B, 3, 4A, 4B, 4C, 4D, 5A, 5B, 5C, 5D, 9A1, 9A2, 9B1, 9B2, 9C, 9D-ல் 36865.60 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1) மனுதாரர் திரு. C.பிரபாகரன், மதுரை அவர்களின் விண்ணப்பம், நாள் 02.11.2018.
2) இவ்வலுவலகக் கடிதம் ந.க. இதே எண், நாள்.31.01.2019.

---

மேற்காண் பொருள் தொடர்பாக, பார்வை 2-ல் கண்டுள்ள இவ்வலுவலகக் கடிதத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி உத்தரவு மற்றும் ம.வ./ம.உ.தி.கு எண்.57(R)/2019, நாள்.31.01.2019 என எண்ணிடப்பட்ட வரைபடங்கள் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், திருப்பரங்குன்றம் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரத்துடன் உள்ளாட்சியை அணுகி தனித்த மனைகளை உரிய கட்டணங்கள் செலுத்தி வரன்முறைப்படுத்திக் கொள்ள தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

உறுப்பினர் செயலர் (பொ),
மதுரை உள்ளூர் திட்டக் குழுமம்.

திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை:- திரு. செ.முருகன், எம்.ஏ.,

ந.க.எண்: 0540/2019/தி7

நாள்: 14.02.2019

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு - மனை வரன்முறைப்படுத்துதல் - திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் - வேடர் புளியங்குளம் ஊராட்சி - வேடர் புளியங்குளம் கிராமம் - சர்வே எண். **145/3,4, 146/1A, 1B,3, 4A, 4B,4C, 4D,5A, 5B, 5C,5D, 9A1,9A2, 9B1,9B2, 9C,9D** -ல் **36865.60** ச.மீ பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவு வரைபடத்திற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியது - வரன்முறைசெய்து உத்தரவிடல்.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்: 255 ஊரக வளர்ச்சி(C2)த் துறை நாள்: 18.08.1997
2. அரசாணை (நிலை) எண்: 71 ஊரக வளர்ச்சி (C2)த் துறை நாள்: 16.06.2003
3. அரசாணை (நிலை) எண்: 78 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)த்துறை நாள்: 04.05.2017
4. அரசாணை (நிலை) எண்: 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(3)த்துறை, நாள்:13.10.2017
5. மனுதாரர் திரு.C.பிரபாகரன், அம்பேத்கர் நகர், மதுரை அவர்களின் விண்ணப்பம் நாள்: 02.11.2018
6. உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண். 5402/2018/மதி-2 நாள்: 31.01.219
7. திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), ஸ்தல பார்வை அறிக்கை நாள் 12.02.2019
8. திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)அவர்களின் ந.க.எண்: 0540/2019/தி7, நாள்: 11-02-2019.
9. மனுதாரர் திரு.C.பிரபாகரன், என்பவரின் வரன்முறை கட்டணம் மேம்பாட்டுக் கட்டணம் செலுத்தியதற்கான வங்கி வரைவோலை மற்றும் ரசீது.

-----------------

**உத்தரவு:-**

திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வேடர் புளியங்குளம் ஊராட்சி - வேடர் புளியங்குளம் கிராமம் - சர்வே எண். **145/3,4, 146/1A, 1B,3, 4A, 4B,4C, 4D,5A, 5B, 5C,5D, 9A1,9A2, 9B1,9B2, 9C,9D** -ல் 36865.60 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு, பார்வை-3ல் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப்பிரிவுகளை முறைப்படுத்துதல் தொடர்பாக மவ/மஉதிகு **எண்.57(R)/2019** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் திரு.C.பிரபாகரன், என்பவருக்கு மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் மூலமாக பார்வை -6ல் காணும் கடிதத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டள்ளது.

அதனைத்தொடர்ந்து பார்வை -7ல் காணும் அறிக்கையின்படி, மனுதாரர் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்களை பார்வை 8-ல் காணும் கடிதம் மூலம் செலுத்த தெரிவித்ததைத் தொடர்ந்து பார்வை 9-ல் காணும் விபரபடி கீழ்கண்டவாறு செலுத்தியுள்ளார்..

**வரன்முறை கட்டணம்:** அரசு கருவூலக செலான் எண்.141, நாள்: 12.02.2019 மூலம் ரூ.125280(ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து இருநூற்றி எண்பது மட்டும்) சார்நிலை கருவூலகம் மதுரை தெற்கு அலுவலகத்தில் அலுவலக முத்திரை பெற்று பின்னர் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, விநாயக நகர் கிளை, மதுரை என மனுதாரால் செலுத்தப்பட்டுள்ளது.

**மேம்பாட்டுக் கட்டணம்:** தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), திருப்பரங்குன்றம் என்ற பெயரில் CUB வங்கி, மதுரை S.S.காலணி கிளை வங்கி, வரைவோலை எண்: 254975, நாள்:12.02.2019 ரூ.104400(ரூபாய் ஒரு லட்சத்து நான்காயிரத்து நாநூறு மட்டும்) மனுதாரால் செலுத்தப்பட்டுள்ளது.

**I. விற்பனை செய்யப்படாத மனைகளின் விபரம் :**

| வ. எண் | மனை எண் | பரப்பளவு சதுர அடி | பரப்பளவு சதுர மீட்டர் |
|---|---|---|---|
| 1 | 7B | 3894 | 361.75 |
| 2 | 12 | 3894 | 361.75 |
| 3 | 16 | 3894 | 361.75 |
| 4 | 18 | 3300 | 306.57 |
| 5 | 25 | 3894 | 361.75 |
| 6 | 28 | 3894 | 361.75 |
| 7 | 34 | 3300 | 306.57 |
| 8 | 37 | 3894 | 361.75 |
| 9 | 54 | 3300 | 306.57 |
| 10 | 59 | 3894 | 361.75 |
| 11 | 60 | 3894 | 361.75 |
| 12 | 72 | 3894 | 361.75 |
| | Total | 44946 | 4175.46 |
| | IV. OSR | | |
| 1 | 57A | 7160 | 665.16 |
| | **Net Total** | **52106** | **4840.62** |

எனவே மேற்காணும் விற்பனைசெய்யப்படாத மனைப்பிரிவுகளை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்து இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிபடுத்தவில்லை, கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நிலஉரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின் படி மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்துகொள்ள வேண்டும். அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம். நில உரிமை குறித்து முடிவு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
2. மனைப்பிரிவின் மனை அளவுகள், புல எண்கள் மற்றும் உத்தேச சாலை அமைப்புகள் ஆகியவற்றை மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆய்வின் போது காட்டப்பட்டதில் மாற்றம் ஏதும் இருப்பின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன் படி தங்கள் மீது உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்
3. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்புச்சட்டம் மற்றும் நில சீர்திருத்தச்சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை என தங்களால் உறுதி மொழி சான்று வழங்கப்பட வேண்டும்.

4. கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மனையின் பரப்பளவு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதல் பரப்பளவு இருப்பது பின்னர் தெரியவந்தால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன்படி தங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.
5. அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:13.10.2017-ல் விதி எண்.7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு **சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) அனைத்தும்** பத்திரபதிவு துறையில் **தனிஅலுவலர், வேடர் புளியங்குளம் ஊராட்சி** என உள்ளாட்சியின் அபிவிருத்திக்கு பதிவு செய்து தரவேண்டும்.
6. இந்த மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் மூலம் மனைப்பிரிவில் அமையும் தனி மனைகளையும் வரன்முறைப்படுத்தப்பட்டதாக எடுத்துக்கொள்ளக்கூடாது.
7. பெறப்பட்ட ஆவணங்களின்படி தயார் செய்யப்பட்ட வரைபடத்திற்கு உள்ளாட்சி விதிகளின்படி உரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
8. மனைகளில் அமைந்துள்ள கட்டிடங்கள் வரன்முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படக்கூடாது.
9. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனையிடத்தில் அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டப்பட்டது கண்டிறியபட்டால் திட்ட அனுமதி இரத்து செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையால் உரிய சட்டரீதியான நடவடிக்கை தங்கள் மீது எடுக்கப்படும்.
10. காலிமனைப்பிரிவு சுற்றிலும் மரக்கன்றுகள் நடப்பட வேண்டும்.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
திருப்பரங்குன்றம்

பெறுநர்

திரு.C.பிரபாகரன்,
க/எண். 16/22G.அம்பேத்கார் நகர்,
பசுமலை,
மதுரை.

நகல் :
1. ஊராட்சி செயலர், வேடர் புளியங்குளம் ஊராட்சி.
2. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மண்டலம் II- ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருப்பரங்குன்றம்.

நகல் பணிந்து அனுப்பப்படுகிறது:-
1. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், மதுரை - 625 020.
2. உறுப்பினர் செயலர்(பொ),உள்ளூர் திட்டக்குழுமம், மாநகராட்சி அலுவலகம், அண்ணா மாளிகை, மதுரை 625 002.
3. சார்பதிவாளர், பத்திர பதிவுத்துறை அலுவலகம், மதுரை.